பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 11உ (27–9–67) புதன் ★ வெளியூர் : புரட்டாசி 12உ (28—9—67) வியாழன் [இதழ் : 88

மத்திய அமைச்சரவையில் மாற்றம் தோன்றுகிறது?

சூழ்நிலைகள் — திருப்பங்கள்
உடனுக்குடன் வந்ததன் விளைவு!

சாக்ளா வெளியேறியதை அடுத்து மத்திய அமைச்சரவையில் செய்யவேண்டிய மாற்றத்தைச் சிறிது காலம் தள்ளிவைக்கலாம் என்ற நோக்கத்துடன், வெளிவிவகாரப் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்ட இந்திரா, எப்படியும் ஒரு மாற்றத்தை—அதிலும் விரைவாக—ஏற்படுத்தியே தீரவேண்டும் என்ற நிலைக்கு இப்போது வந்திருக்கிறார் எனத் தெரிகிறது

நம்நாடு செய்தி நோக்கு

வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங், தமது பாங்காக் பயணத்தைப் பாதியில் முடித்துக்கொண்டு, புதுடில்லிக்குத் திரும்பியிருக்கிறார்.

புதுடில்லியிலிருந்து ஐ. நா.-வுக்குப் புறப்படுவதாக இருந்த பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங், தமது பயணத்தை இரண்டு நாட்களுக்குத் தள்ளிப்போட்டிருக்கிறார்.

'பிற்பட்ட—தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர்களுக்கு மத்திய அமைச்சரவையிலுள்ள பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கையைக் கவனிப்பதாக இந்திரா ஏற்கனவே கூறியிருப்பதனை அடுத்து, நேற்று, முன்னாள் மத்திய அமைச்சர் சஞ்சீவய்யா, தலைமை அமைச்சரைச் சந்தித்திருக்கிறார்.

இந்த மூன்று செய்திகளும், 'மத்திய அமைச்சரவையில் உடனடியாகத் தோன்ற இருக்கும் மாற்றத்தின் அறிகுறி' என்று நம்பப்படுகிறது.

இந்திரா, அக்டோபர் 8-ந்தேதி முதல் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள இருப்பதால், எந்த ஒரு மாற்றமும்—சேர்க்கையும், அதற்குள்ளாக இருக்கவேண்டியதாகிறது.

மேலும், அதற்கு இரண்டு நாட்கள் முன்னதாகக் காங்கிரசுக் காரியக் கமிட்டிக் கூட்டமும் புதுடில்லியில் கூடுகிறது.

"இந்திரா—காமராசரிடையே கருத்து வேற்றுமையை ஏற்படுத்தியிருக்கும் வங்காளத்துக் காங்கிரசுக் கட்சிக் கலைப்பு விவகாரம் அப்போது சூடுபிடிக்கலாம்" என்று யூகிக்கப்படுகிறது.

இந்திராவின் ஒப்புதலுடன் நந்தா தயாரித்திருக்கும் வங்காளக் காங்கிரசின் பட்டியலில், அதுல்யா கோஷ் எதிர்ப்பாளர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அத்துடன், அந்தப் பட்டியலுக்கு உமாயூன் கபீர், அஜாய் முகர்ஜி ஆகியோரின் ஆதரவு இருப்பதாகவும் தெரிகிறது.

"உமாயூன் கபீர், மத்திய அமைச்சரவைக்கு வரலாம்" என்ற நம்பிக்கை ஏற்கனவே ஒருபுறம் இருக்க, அதற்குத் தகுந்தவாறு குல்சாரிலால் நந்தா, பட்டியலைத் தயாரித்திருப்பது, 'திட்டமிட்டே இந்திரா, இந்தக் காரியத்தைத் துவக்கியிருக்கிறார்' எனத் தோன்றுகிறது.

'அமைச்சரவைக்கு ஒரு நிலையான தன்மை வேண்டும்' என்ற நோக்கத்துடன்தான் வங்காளத்து விவகாரத்தில்—காமராசரும் எதிர்பாராத வகையில்—இந்திரா ஈடுபட்டிருக்கிறார்!

"நிலைமைகள் இவ்வாறு தானாகவே உருவாகி இருப்பதால், தள்ளிவைக்கப்பட்டிருந்த அமைச்சரவை மாற்றம், உடன் மேற்கொள்ளப்படும்" என்று செய்திகள் யூகம் தெரிவிக்கின்றன.

வங்காளத்து விநோதங்கள்!

மாநிலக் காங்கிரசைக் கலைக்கும் அதிகாரம் அகில இந்தியக் காங்கிரசின் செயற்குழுவுக்குத்தான் உண்டு; அல்லது, அதன் சார்பாக காங்கிரசின் தலைவர் அதைச் செய்யலாம்.

இந்த நிலையில், 'பார்த்துவிட்டு வா' என அனுப்பப்பட்ட நந்தா, 'கலைத்துவிட்டு' வந்து நிற்கிறார்!

தமிழகத்தின் ஒரு மூலையில் இருந்த காமராசருக்கு, அது அதிர்ச்சி மட்டுமல்ல—கோபத்தையும் மூட்டியிருக்கிறதாம்!

நந்தா, இந்திராவின் ஒப்புதலை மட்டும் பெற்று இந்தக் காரியத்தை நடத்தியிருக்கிறார் போலிருக்கிறது!

"காங்கிரசில் நமக்குள்ள செல்வாக்குதான் எப்படி இருக்கிறது பார்ப்போமே; பின்னால் சொல்லிக்கொண்டால் போகிறது" என்ற எண்ணத்தில் இந்திரா, நந்தாவுக்குப் பச்சை விளக்கு காண்பித்ததாகவும், அந்த அடிப்படையில்தான் வங்காளக் காங்கிரசு எதிர்பாராத வகையில் கலைக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வெளிவந்ததாகவும் கூறப்படுகிறது.

அதனால் கோபமடைந்த காமராசர், இந்திராவின் ஒப்புதலுடன் நந்தா தயாரித்த தற்காலிகக் காங்கிரசுக் கமிட்டியின் பட்டியலுக்கு ஒப்புதல் தர மறுத்திருக்கிறார்!

"எரிகின்ற வீட்டைப் பார்த்துக்கொண்டு சும்மாவா இருப்பது?" என்று நந்தாவுக்குச் சப்பைக்கட்டு கட்டிய காங்கிரசுச் செயலாளர் சாதிக் அலிக்கும் தெரியாமல் காங்கிரசு மேலிடத்தின் தூதுவர் ஒருவர் இன்று காமராசரைச் சந்திக்கப் பறந்துவந்திருக்கிறாராம்!

"தமிழகப் பயணம் போதும்; வாருங்கள் தலைநகருக்கு—28-ந் தேதி" என்று காங்கிரசுத் தலைவர்கள் சிலர், காமராசரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்!

வங்காளத்து நிகழ்ச்சி, சட்டப் பிரச்சினையாக மட்டுமல்ல—காமராசரது தலைமைக்கு விடப்பட்டுள்ள ஒரு சவால் பிரச்சினையாகவும் மாறியிருக்கிறது!

"என்னைக் கலக்காமல் எப்படி இந்தக் காரியம் செய்யலாம்" என்று அவரது பதவிக்கு இழுக்குத் தேடும் வகையில் வெளிப்படையாகக் கேட்டுக் கண்டிக்க முடியாத காமராசர்—'நந்தாவின் காரியம் சட்டத்துக்குப் புறம்பானது' என்ற காரணத்தை வைத்துக்கொண்டு—தனக்கு இருக்கும் கவுரவத்தைப் பரிசோதித்துப் பார்ப்பார் என்று தெரிகிறது!

அக்டோபர் 6-ல் காங்கிரசுக் காரியக் கமிட்டிக் கூட்டம்!
அக்டோபர் 8-ந் தேதி இந்திராவின் வெளிநாட்டுப் பயணம்!
இடையில் 'மத்திய அமைச்சரவையில் மாற்றம்' என்ற யூகம்!

இவ்வளவுக்கும் நடுவில் வங்காளத்து விநோதமும் வந்திருப்பது, காங்கிரசு மேலிடத்தில் நல்ல சலசலப்பை ஏற்படுத்தியே தீரும்!

—'பாக்சர்'

நாளை

மேலை நாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள 'நம் நாடு' ஆசிரியர் இரா. செழியன் எம்.ஏ, எம்.பி. அவர்கள் 'ஜெனீவா' பற்றி எழுதும் கட்டுரை நாளை (28—9—67) 'நம் நாடு' இதழில் இடம் பெறும்.

சேக் அப்துல்லா பற்றி புதிய செய்தி!

மாதம் ஒன்றுக்குப் பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவில் பல வசதிகளுடன் புதுடில்லி 'கொட்லா' வீதி மாளிகை ஒன்றில் சிறைவாசமிருக்கும் ஷேக் அப்துல்லா, 'விடுவிக்கப்படுவார்' என்று தாம் நம்புவதாக ஜனசங்கத் தலைவர் கே. எல். குப்தா கூறியிருக்கிறார்.

ஜனசங்கக் கட்சியின் பாராளுமன்றக் கொறடாவான அவர், இரு தினங்களுக்கு முன் தலைமையமைச்சர் இந்திராவைச் சந்தித்து அரை மணி நேரம் விவாதம் நடத்தியதன் முடிவாக இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

"அப்துல்லாவை இனியும் சிறை வைத்திருப்பதன் மூலம், அரசாங்கம் நெருப்புடன் விளையாடிக்கொண்டிருக்கிறது" என அவர் எச்சரித்திருக்கிறார்!

"காஷ்மீரத்திலுள்ள பாகிஸ்தான் ஆதரவாளர்களின் பலம் இப்போது குறைந்துவிட்டது; இராணுவத்தின் பிடியிலேயே காஷ்மீரை வைத்திருப்பது நல்லதல்ல" என்று இந்திரா தன்னிடம் தெரிவித்ததாக குப்தா தெரிவித்திருக்கிறார்.

'ஷேக் அப்துல்லா விடுதலை ஆவார்' என்று முன்னரே ஒருமுறை செய்தி வெளிவந்ததும், அது அதிகாரபூர்வமாக மறுக்கப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தென்னிந்திய ஓட்டல்கள்மீது கல் வீச்சு!

தாக்கப்பட்டவர்களையே போலீசார் கைது செய்தனர்

வட பம்பாய்ப் பகுதிகளான போய்வாடாவிலும், மாகிமிலும் உள்ள தென்னிந்தியருக்குச் சொந்தமான உணவு விடுதிகள்மீது, சிவசேனையைச் சேர்ந்த குண்டர்கள் கல்லெறிந்து அட்டகாசம் புரிந்திருக்கின்றனர்.

தகவலறிந்ததும் போலீசார் விரைந்து வந்து அமைதியை நிலைநாட்டியதாகக் கூறப்படுகிறது.

தாக்குதலுக்காளானவர்கள் அனைவருமே தென்னிந்தியர்கள் ஆவர்.

தாக்குதலுக்கானவர்களையே போலீசார் கைது செய்துள்ளனராம்.

அண்ணா கோரிக்கை ஏற்கப்பட்டது

தமிழகம் தனி உணவு மண்டலமாக நீடிக்கும்

சென்னை, செப். 26—

"தற்போது உள்ள உணவு மண்டல முறையே நீடிக்க வேண்டும்" என்ற தமிழக அரசின் கோரிக்கை, முதலமைச்சர்கள் மாநாட்டில் ஏற்கப்பட்டது.

"தமிழகம் இப்போதுள்ளது போன்றே, தனி உணவு மண்டலமாக நீடிக்க வேண்டும்" என்று வலியுறுத்தி, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கும், மத்திய உணவமைச்சர் ஜெகஜீவன்ராமுக்கும்—தமிழக உணவமைச்சர் மதியழகன் மூலம்—கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

முதலமைச்சர்கள் மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றதும் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக உணவமைச்சர் மதியழகன், உணவு மண்டலம் பற்றிய முதலமைச்சர்கள் மாநாட்டு முடிவைத் தமிழகம் வரவேற்பதாகக் கூறினர்.

பிரச்சினைகள் கொடுக்கும் 'சூட்டில்', அதில் தெரிந்து கொள்ள வேண்டிய 'ஒளி' மறைந்துவிடுகிறது!

அதற்கு உதாரணமாக ஒன்று கூறுகிறேன் கேளுங்கள் :—

★ சாக்ளா பதவி விலகினாரே—அந்தக் கடிதம் எந்த மொழியில் எழுதப்பட்டது தெரியுமா?—

ஆங்கிலத்தில்!

★ 'உங்கள் பதவி விலகுதலை வருத்தத்துடன் ஏற்கிறேன்; இந்திக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுத்துத்தான் தீர வேண்டும்" என்ற கருத்துப்பட தலைமையமைச்சர் இந்திரா பதில் எழுதினாரே—அது எந்த மொழியில் தெரியுமா?—

ஆங்கிலத்தில்!

★ 'இந்திக்குத்தான் அது அதிக சாதகத்தைக் கொடுக்கும்' என்று தெரியாமல் அல்லது தெரிந்தும் காட்டிக்கொள்ளாமல், 'வட்டார மொழிகள் வளரவேண்டாமா? ஆங்கிலம் இருந்துகொண்டே இருந்தால் எப்படி?' என்று, சாக்ளா பதவி விலகுதலின்போது சமாதானம் சொன்னாரே மத்திய கல்வி அமைச்சர் திரிகுண சென்—அந்த விளக்கத்தை அவர் எந்த ஒரு வட்டார மொழியிலும் சொல்லவில்லை; அல்லது இந்தியிலும் இல்லை; வேறெந்த மொழியில் தெரியுமா?—

ஆங்கிலத்தில்!

★ பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவராக இருப்பவர் டாக்டர் டி. எஸ். கோத்தாரி; 'வர வர வட்டார மொழிகளின் முக்கியத்துவமும் உபயோகமும் அலட்சியப் படுத்தப்பட்டு வருகின்றன இந்த நாட்டில்' என்று அண்மையில் நொந்து கொண்டார்; எந்த மொழியில் தெரியுமா?—

ஆங்கிலத்தில்!

★ குடியரசுத் துணைத் தலைவர் வி.வி. கிரி, சில நாட்களுக்கு முன் பெங்களூரில் மொழி விவகாரம் பற்றிப் புதிய யோசனை ஒன்றைச் சொன்னார்;— 'ஆரம்பக் கல்வியில் சமஸ்கிருதம் கட்டாயப் பாடமாக்கப்பட்டு விட்டால் எல்லாம் சரியாகிவிடும்' என்று; அந்த யோசனையை எந்த மொழியில் வெளியிட்டார் தெரியுமா?—

ஆங்கிலத்தில்!

ஆங்கிலத்தின் முக்கியத்துவம் போய்விடும் என்று நினைக்கிறீர்கள்?

தன்னை 'வேண்டாம்' என்பவரையே — 'வெறுப்பேன்' என்பவரையே ஆங்கிலம் எப்படி ஆட்கொண்டு விடுகிறது என்று பார்த்தீர்களா?—

—எஸ். ஆர்.

மூன்றுவது உலகத் தமிழ் மாநாடு பிரான்ஸ் நாட்டில்!

சென்னை மாநாடு சிறப்பாக நடைபெறும்

தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் நம்பிக்கை

சென்னை, செப். 25—

"மூன்றுவது உலகத் தமிழ் மாநாடு பிரான்சில் நடைபெறும்"

என்று, திரு. தனிநாயகம் அடிகள் இங்கு தெரிவித்தார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தில் பொதுச் செயலாளரான திரு. தனிநாயகம் அடிகள், சென்னையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனித்துச் செல்வதற்காக இங்கு வந்துள்ளார்.

சென்னையில் சனவரி 3-ஆம் நாள் தொடங்கி 10-ஆம் நாள் வரை நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடந்தேறும் எனத் தாம் நம்புவதாகவும், தற்போது தி.மு.க. தமிழகத்தில் ஆட்சியில் இருப்பதால், தமிழறிஞர்களிடையே புதிய உற்சாகம் காணப்படுவதே தமது நம்பிக்கைக்குக் காரணம் என்றும் அவர் கூறினார்.

மூன்றுவது உலகத் தமிழ் மாநாடு பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரத்திலிருந்து 30 கல் தொலைவில் உள்ள 'சாண்டிலி' என்ற இடத்தில் 1970-ம் ஆண்டு நடைபெறத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும், நான்காவது மாநாடு 1973 அல்லது 1974-ல் இலங்கையில் நடைபெறக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார். (முதல் மாநாடு 1966-ல் ஏப்ரல் திங்கள் கோலாலம்பூரில் கூடியது.)

ஆற்றில் போட்ட நாலு கோடி ரூபாய்!

★

மின்சக்தி உற்பத்தி—நீர்ப் பாசனத்திற்காகத் தண்ணீரைத் தேக்குவது—'தவா' ஆற்றின் மீது பாலம் கட்டுவது போன்ற நோக்கங்களுடன், இன்றிலிருந்து 10 ஆண்டுகளுக்கு முன்பாக மத்தியப் பிரதேசத்தில், 'தவா திட்டம்' தொடங்கியது; இதற்காக 10 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

இன்றுவரை இந்தத் திட்டத்தின் பெயரால், 'ரூ. 4 கோடி செலவு செய்யப்பட்டது' என்பதைக் காட்டிலும், 'பாழாக்கப்பட்டது' என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்!

கணக்கற்ற நிர்வாக ஊழியர்கள் அமர்த்தப்பட்டும், வேலை ஆமைவேகத்தில்தான் நடந்துகொண்டிருக்கிறது!

வேலையில் ஊழல்களும், திறமையின்மையும், பொறுப்பின்மையும் பெருகிவருகிறது!

பாலம் கட்டுவதற்காகப் 10 தூண்கள் எழுப்பப்பட்டன! ஒரு சிறிய வெள்ளம் வந்ததும், அவற்றில் 9 தூண்கள் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன!

திறந்த வெளியில் 78 பெரிய 'மெஷின்'கள் மழையிலும், வெய்யிலிலும் துரு ஏறிக் கிடக்கின்றன!

இலட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள டயர்கள் வீணாகிக் கொண்டிருக்கின்றன!

ரூ. 7½ இலட்சம் மதிப்புள்ள ஓர் இயந்திரம்—அதனுடைய சிறு பகுதி கிடைக்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காக ஓராண்டுக்காலமாகப் பயன்படுத்தாமல் இருந்ததனால், நிலத்தில் புதைந்து போயிருக்கிறது! தொடர்புள்ள தொழிற்சங்கங்கள் நிலைமையை முன்னாள் முதலமைச்சர் டி. பி. மிஸ்ரா, தலைமையமைச்சர் இந்திரா காந்தி போன்றவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் பலன் ஏதும் விளையவில்லை.

—'தினமான்' (இந்தி வார ஏடு)

சென்னையில் திருக்குறள் கண்காட்சி

குருகுலத் திருக்குறள் நிலைய ஆண்டு விழாவினைச் சென்னையில் மிகச் சிறந்த முறையில் நடத்த 3—9—67 காலை 10 மணிக்குச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில், திருக்குறள் பீடம் குருகுலம் அழகரடிகள் அவர்கள் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது.

12—10—67 அன்று திருக்குறள் கிளை நிலைய ஆண்டு விழாவினை, காலை—திருக்குறள் கண்காட்சி; பிற்பகல்—திருக்குறள் ஆராய்ச்சி விரிவுரைகள்; இரவு—குறள் கலை நிகழ்ச்சி நடத்துவதென்றும், அதற்கு முறையே கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன், உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி, பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி, திரு. நா. மகாலிங்கம், பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு, பேராசிரியர் பு. பா. இராசராசேச்சுவரியார், திரு. சி. வேங்கடசாமி, கிராமநல ஆசிரியர் முதலியவர்களை அழைப்பதென்று முடிவு செய்து, திருக்குறள் கண்காட்சிக்கு உரிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திருக்குறள் கண்காட்சியில் இதுவரை வெளிவந்த நூல்கள், சுவடிகள், பதிப்பாசிரியர்கள்—உரையாசிரியர்கள் திருவுருவப் படங்கள் முதலியன இடம் பெறும்.

நெல்லுக்குள் அரிசி இருப்பது போன்ற இரகசியம்!

காங்கிரசுக்குள்ளேயே காமராசரைக் கவிழ்க்கத் துரோகம்!

"காமராசரைக் கவிழ்க்க நம் நாட்டிலும், மத்திய ஆட்சியிலும் நடக்கும் துரோகச் செயல்கள் யாருக்குத் தெரியாது?

"காங்கிரசுத் 'தலைவர்'களாலேயே காமராசரைக் கவிழ்க்கப் பாடுபடுபவர்கள்தானே மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் இருக்கிறார்கள்?

"இதற்கு உதாரணம், காமராசர் நண்பர்கள்—ஆதரவாளர்கள் எல்லோருமே தமிழ்நாடு காங்கிரசுப் பிரமுகர்கள், பெரும் பதவியாளர்கள் ஆகியவர்களுக்கு விரோதிகள்தானே? இது யாருக்குத் தெரியாது?—நெல்லுக்குள் அரிசி இருப்பது போன்ற இரகசியம்!"

—'விடுதலை' 18-9-67 தலையங்கப் பகுதி

அண்ணல் காந்தியார் அறவழி போற்றுவோம்!

நாட்டின் நல்வாழ்வுக்கு விளைவினைக்கூட்டுவோம்!

கல்வியமைச்சர்
இரா. நெடுஞ்செழியன்

உலகைத் திருத்திய பெரியார்களின் வரிசையில் ஒருவராக இடம்பெற்றுவிட்ட அண்ணல் காந்தியார் அவர்கள், உலகத்தார்க்குப் புதிய ஒளியைத் தந்தார்! இந்திய நாட்டிற்குப் புதிய வாழ்வை அளித்தார்!

'செயற்கரிய செய்வர் பெரியார்' என்பது வள்ளுவர் வாக்கு. வள்ளுவரின் இலக்கணத்திற்கிணங்க செயற்கரிய செயல்கள் பலவற்றைச் செய்து உலகப் பெரியாராகத் திகழ்ந்தார் காந்தியடிகளார்! உலக அரங்கில் அவர் பெயரும், புகழும் நிலையாக நின்று நிலவி வருகின்றன!

அண்ணல் காந்தியார் அவர்கள், இந்தியாவின் அரசியல் விடுதலை—இந்தியாவின் பொருளாதார விடுதலை—இந்திய மக்களின் சமூக விடுதலை—ஆகியவற்றை அடைவதற்காகப் புதியதொரு அறநெறியை வகுத்தவர்கள் ஆவார்கள்!

பொதுவாக, வரலாற்றில் அரசைக் கைப்பற்ற—அரசை மாற்றியமைக்கப் படைக் கருவிகளும், போர் முறையுந்தான் பயன்பட்டு வந்திருக்கின்றன; ஆனால் அண்ணல் காந்தியடிகள், புதிய அறப்போர் முறையை வகுத்துத் தந்தார்கள்—அதில் சிறந்த வெற்றியும் பெற்றார்கள்!

'போர்' என்பது, படைக் கருவிகளைக்கொண்டு பிறரைத் தாக்கி வெற்றிகொள்ள முயல்வது!

'அறப்போர்' என்பது, தன்னைத்தானே வருத்திக்கொண்டு அதன்மூலம் மக்களின் ஒருமித்த ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெற்று வெற்றிகொள்வதாகும்! அண்ணல் காந்தியடிகள், இந்த அறப்போர் முறையைப் பின்பற்றி, புதிய அறநெறியை உலகினுக்கு வகுத்துத் தந்தார்கள்!

அண்ணல் காந்தியடிகள் அரசியலிலே ஆணவத்தை வெறுத்தார்—ஆனால் அதே நிலையில் அறிவை நிலைநாட்டினார்!

அடிமைத்தன்மையை வெறுத்தார்—அதே நிலையில் அடக்கத்தைப் போற்றினார்!

வெறி உணர்ச்சியை அழித்தார்—அதே நிலையில் பற்றுணர்ச்சியைப் பாராட்டினார்!

வன்முறையை அகற்றினார்—அதே நிலையில் மென்முறையைக் கடைபிடித்தார்!

ஆடம்பரத்தை வெறுத்தார்—அதே நிலையில் எளிமையைக் கைக்கொண்டார்!

படபடப்பை மறுத்தார்—அதே நிலையில் பொறுமையைக் கையாண்டார்!

இப்படி, பல்வேறு சீரிய பண்புகளின் உறைவிடமாக விளங்கிய காந்தியடிகள், அரசியலிலே உயரிய பண்புகளையும், நாகரிகத்தையும் நிலைநாட்டிச் சென்றார்!

அண்ணல் காந்தியடிகள்—செயலாற்றல், விடா முயற்சி, இடிமை, அடக்கம், ஊக்கம், எளிமை, அன்பு, அருள் போன்ற பல்வேறு பண்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்.

பார்-அட்-லா படித்து, சிறந்த வழக்கறிஞராக ஆகி, உயர்ந்த நிலையில் இருந்த அண்ணல் காந்தியார், தாம் அடைந்திருந்த வசதியான வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு எளிமைக் கோலம் பூண்டு—எளியவரோடு எளியவராய்—தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார் என்பது அவருடைய மன உறுதியையும், மனத் தூய்மையையும் காட்டுவதாகும்!

அவர் எளிமையை மேற்கொண்டது, 'தமிழகத்தைச் சேர்ந்த மதுரைக்கு வந்திருந்தபோதுதான்' என்று அறியும்போது, நமக்கு ஒருவிதப் பெருமித உணர்ச்சி ஏற்படுகிறது!

அவர் தமிழகத்திற்கு வருகை தந்தபோது, கணுக்கால் வரை வேட்டி கட்டியவராக—முழுக்கை சட்டை போட்டவராக—தலைப்பாகை அணிந்தவராய் வந்தார்.

மதுரையில் அவர், சட்டை வேட்டி இல்லாமல்—வெறும் துண்டோடும், கோவணத்தோடும் ஆயிரக்கணக்கான மக்கள் காட்சி அளிப்பதைக் கண்டு, அதற்குரிய காரணத்தைக் கேட்டறிந்தார்; 'வறுமைதான் காரணம்' என்று பக்கத்திலிருந்தவர்கள் கூற—தான் பிறந்த நாட்டில் உடுத்திக்கொள்ள வேட்டியும், சட்டையும் அற்ற மக்கள் எண்ணிறந்தவர்கள் வாழும்போது, தனக்கு மட்டும் ஏன் வேட்டி—சட்டை—தலைப்பாகை என்று கருதி, அவற்றையெல்லாம் களைந்துவிட்டு, மற்ற ஏழை எளியவர்களைப் போன்று முழங்கால் வரை வேட்டி கட்டி, அரை நிர்வாணமாக மாறினார்! என்று தன் நாட்டு மக்கள் அத்தனைப் பேரும் முழு வேட்டி கட்டியும், முழுச்சட்டையும் போட்டு வருவதற்கான நிலைமை ஏற்படுகிறதோ அன்றுதான் தாமும் முழுச் சட்டை போட்டு, முழு வேட்டி கட்டுவது என்று உறுதி பூண்டார்! அந்த உறுதி, அவர் மறையும் வரையில் நிலைகுலையாமல் அப்படியே இருந்தது, அவரது மனத்திட்பத்தைக் காட்டுவதாகும்!

கோடிக்கணக்கான மக்கள் குனிந்து செல்கின்ற குடிசையில் வாழ்கிறபோது, தமக்கு மட்டும் ஏன் மாட மாளிகை என்று அவற்றை விட்டு வெளியேறி, குடிசை வாழ்வோரின் குடியிருப்புக்கு அருகில் குடிசை போட்டுக்கொண்டு வாழ்ந்து காட்டினார்!

'மனத்தை அடக்கு' என்று புத்தர் கூறியதற்கிணங்க—'பற்றை விடுக' என்று வள்ளுவர் கூறியதற்கிணங்க—'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பழமொழிக்கிணங்கவும், அவர் தமது வாழ்க்கைத் தேவைகளை மிகைவாகக் குறைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் மனநிறைவோடும், மன அமைதியோடும் வாழ்ந்து காட்டினார்!

"ஒருவன் தன்னுடைய தேவைகளை, தன்னுடைய முயற்சியாலும் தன்னுடைய உழைப்பாலும்தான் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்" என்ற கொள்கையை நிலைநாட்ட, அவர், தன்னுடைய உண்டி—உடை—உறையுள் போன்ற தேவைகளைத் தாமே நிறைவேற்றிக்கொண்டார்!

அவர் அரசியலிலே ஊட்டிய விடுதலை வேட்கையும், பொருளாதாரத் துறையிலே நடந்துகாட்டிய எளிமையான போக்கும், சமூக வாழ்விலே கடைபிடித்துக் காட்டிய அன்பு நெறியும் நமக்கெல்லாம் என்றென்றும் வழிகாட்டியாக அமைவனவாகும்! வீழ்ச்சியுற்ற நாட்டிற்கு எழுச்சியூட்ட அவர் ஆற்றிய பெரும் பணிகள், நினைந்து நினைந்து—பாராட்டிப் போற்றி—வாழ்த்தி வரவேற்றுக் கொள்ளத் தக்கனவாகும்.

அண்ணல் காந்தியார் பிறந்த நாள் விழாவை நாம் கொண்டாடுவது அவருக்குப் பெரிய பெருமையைத் தருவதாகாது!

காந்தியடிகள் கொண்டிருந்த உயரிய கொள்கைகளிலே தீண்டாமை ஒழிப்பும், மதுவிலக்கும் மிக முக்கியமானவைகளாகும்; அந்த இரு கொள்கைகளையும் தீவிரமாகக் கடைபிடிக்கத் தமிழகத்தின் புதிய அமைச்சரவை தக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருப்பதை நாடு நன்கு அறியும்.

தீண்டாமை ஒழிப்பின் ஒரு கட்டம்தான், கலப்புத் திருமணத்தை ஆதரிக்கின்ற முயற்சிகளைத் தமிழக அரசு தீவிரமாக மேற்கொண்டிருப்பது!

வருவாய் பெருக்கம் குறித்து மதுவிலக்கை அகற்றும் திட்டத்தை வேறு பல மாநிலங்கள் மேற்கொண்டு வருகிற இந்த நாளில் 'அந்தத் திட்டத்தை மிகத் தீவிரமாக அமுல்படுத்துவோம்' என்றும், 'மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்து இலாப-நட்டக் கணக்கு பார்க்க மாட்டோம்' என்றும், 'அதனால் பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் அதை உறுதியாக நிறைவேற்றியே தீருவோம்' என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறிவருகிறார்கள்.

இந்த இரண்டு கொள்கைகளையும், நாடு நகரம்—பட்டிதொட்டி—சிற்றூர் பேரூர்—ஆகிய எல்லா இடங்களிலும் நிலைநாட்ட, நல்லறிவு படைத்தோரும், நாட்டின் நலனில் அக்கறை கொண்டோரும், இளைஞர்களும், மாணவர்களும் முன்வர வேண்டும்.

அண்ணல் காந்தியாரின் சீரிய கொள்கையெல்லாம் செயல்படுத்தப்பட்டு, அத்திட்டங்களிலும் நிலைகளிலும் அண்ணலைக் காண முற்படுவதுதான் நம்முடைய நீங்காக் கடமையாகும்.

நாம் புதுவாழ்வு பெறவும், பெருமை பெறவும் பாடுபட்ட அண்ணலின் 100-வது பிறந்தநாள் விழா 1969-ல் வருகின்றது. அவ்விழாவை உலகம் முழுவதும் உள்ள மக்கள் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டு வருகிறார்கள்.

அந்த நூற்றாண்டு விழாவை மிகச் சிறந்த முறையில்—அவருடைய சீரிய கொள்கைகளை நிலைநாட்டும் வகையில் கொண்டாட, பொதுவாக இந்தியா முழுவதும்—குறிப்பாகத் தமிழகத்தில், சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அந்த விழாவுக்கு முன்னோடியாக விளங்குகிற வகையில், இவ்வாண்டு அண்ணலின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். அதற்கு உறுதுணை புரிகின்றவகையில், தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சிகளும்—எல்லாச் சமயத்தினரும்—எல்லா வகுப்பினரும்—எல்லாப் பருவத்தினரும் முன்வர வேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

★ புகழ் மணக்கும் பெருவிழா! ★

பேரறிஞர் அண்ணா அவர்களின் ஐம்பத்தொன்பதாம் ஆண்டு பிறந்த நாள் விழா, கடந்த 15-ம் நாள் முதல் 22-ம் நாள் முடிய பொதுவாக நாடெங்கிலும் கொண்டாடப்பட்டது; எனினும், தொடர்ந்து இன்னும் பல இடங்களிலும், தத்தம் வாய்ப்பு--வசதிக்கேற்ப கொண்டாடிக்கொண்டிருக்கின்றனர்.

அந்த விழா நிகழ்ச்சிகளையெல்லாம் செய்தியாகத் தொகுத்து விரிவாக வெளியிடுவது என்பது—'நம் நாடு' இதழைப் பொறுத்தவரையில்—இயலாத ஒன்றாகும்.

எனவே, நாடு பூண்ட விழாக்கோலத்தையும். நாட்டு மக்களின் உள்ளப்பான்மையையும் அப்படியே படம் பிடித்து—எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரே செய்தியாக்கித் தருகின்றார், இக்கட்டுரை ஆசிரியர்.

'கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்று எண்ணி, 'உற்ற கலைமடந்தை இன்னம் ஓதிக்கொண்டிருக்கிறாள்' என்று சித்தாந்திகள் கற்பனையாய்ச் சொல்லுகின்ற தத்துவத்தின் உண்மை உரு விளங்க வேண்டுமானால், அறிஞர் அண்ணா அவர்களின் 59-வது பிறந்த நாள் விழா நன்றிச் சேதியைப் படியுங்கள் :—

"'இத்துணைப் பெரிய காரிய மாற்ற நம்மால் முடியுமா என்று ஏக்கமடையாதே; நாங்கள் உடன் இருக்கிறோம்' என்று தமிழக மக்கள் அறிவித்துள்ளார்கள். விழாவின் உண்மைப் பொருள் அதுதான் எனக் கருதுகிறேன்.

"நான் சமூகத்துக்குக் கொடுத்துள்ளதைக் காட்டிலும், பல மடங்கு அதிகமாகச் சமூகத்திடம் பெற்றுக்கொண்டுள்ளேன்—நல்லெண்ணத்தை!

"இதனைச் சிறிய செயல்கள் மூலம் திருப்பித் தருவது என் கடமை!

"அதற்கான பக்குவத்தை விழா உணர்வு எனக்கு அளித்திருக்கிறது."

"எப்போதும் பாடம்! எதிலும் படிப்பினை!" என்று 59 வயதிலும் வாழ்வின் பயனைப் பெருக்கிக் கொண்டிருக்கும் அறிஞர் அண்ணாவைப் பற்றி வேறு எப்படிச் சொல்வது?

செப்டம்பர் 15-ல் — அவர் பிறந்த நாளில்—தமிழ் மண் புனைந்த எழிற்கோலத்தை எப்படி எழுத்திலே வடித்திட?

முத்திசையும் அலைபுரளும் கடற்கன்னி வடிம்பு அலம்ப நின்ற நெடியோன்—நிலந்தரு திருவிற் பாண்டியன் புகழ் போல் கடல்கடந்து, நிலங்கடந்து, காலங்கடந்து நிலைத்துவிட்ட சாட்சியாய்ப் பேரறிஞர் அண்ணாவின் புகழ் கொடி கட்டிப் பறக்கிறது!

பிறந்த நாளில் சிறக்கத் தெரிந்த அந்தப் புகழ், ஊழி உள்ளளவும் நிலைபெற இருக்கிறது!

ஏனெனில், அவர் செய்யும் ஒவ்வொன்றும் — அவர் சோல்லும் ஒவ்வொன்றும்— காலத்தால் நெஞ்சில் முற்றிக் கனிந்தவை! எட்டிக்குப் போட்டியாய் எண்ணாமற் செய்யும் செயல்கள் அல்ல அவை! வாதமெனும் காற்றடித்து உதிர்ந்து போகும் பிஞ்சுக் கருத்துக்கள் அல்ல அவை!

தாம் பிறந்த நாளில் அண்ணா அவர்கள், தம் இல்லத்திலேயே அமைதியாய் இருந்தார்கள்! தமிழகத்து கவர்னர் தம்பதிகள் உட்பட அனைவரும் அவரை வீட்டில் கண்டு வாழ்த்திய சிறப்பு வேறு எந்த முதலமைச்சருக்குக் கிடைக்கும்?

யாரையும் வாழ்த்திப் பழக்கமில்லாத சில 'தலை'கள் அவரை வாழ்த்தாவிட்டாலும், இதயம் உள்ளவர்கள் எல்லாரும் வாழ்த்தினார்கள்!

எதிரொலித்த நாட்டு வானொலி வாழ்த்திற்றே — 'இந்நாளில் எமது இதயங்கனிந்த வாழ்த்தையும் அண்ணா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவரைத் தமிழக மக்களுக்கு அளித்த கடவுளையும் வாழ்த்துகிறோம்" என்று!

உணர்ச்சியே மலிவாயும், ஆவேசமே அதிகமாயும் கிடைக்கும் அரசியல் சந்தையில், அறிவை மையமாய் வைத்து ஆவேசத்தையும் உணர்ச்சியையும் அறிவுடன் இணைத்த அவருடைய பிறந்த நாள் கொண்டாட்டச் சிறப்புக்களைத் தாங்கிவந்த நாள் இதழ்கள், கோயில்களில் அவர் நீடு வாழ அர்ச்சனைகள் நிகழ்ந்ததாக எழுதவில்லை; கட்சிக்காரர்களோ, கோயிற் புரோகிதரோ அவரிடம் 'பிரசாதம்' வழங்கும் நிலையில் புகைப்படம் வெளியிடவில்லை; மாறாக, நூறு நூறு கைகள்—கல்லெடுத்து மண் பிசைந்து பழக்கமில்லாத கைகள்—கடமை உணர்வுடன் பத்தே நாட்களில் கட்டி முடித்துப் பரிசாய் வழங்கிய ஊரூர்ப் பள்ளிக் கட்டிட மாதிரியை வழங்கும் படங்களை வெளியிட்டன! **அதுதான் மக்கள் தலைவரின் பிறந்த நாள் விழா!**

அண்ணாவே ஓர் அமைப்பு! அண்ணாவே ஓர் இயக்கம்! அமைப்பினை இயக்கிடும் இயக்குநர் அவரே! அதைச் சுட்டிடும் வண்ணம் அவர் பிறந்த நாளை அடுத்த இரண்டு நாட்களில்—செப்டம்பர் 17-ல் கழகம் பிறந்த நாளும் வந்தது! 'கழகம் பிறந்த நாளை மறந்துவிட்டனரோ' என்று சொல்லும் வகையில், அண்ணா பிறந்த நாள் நிகழ்ச்சிகள் சிறப்பாய் அமைந்தன; உண்மைதான்; ஆனால், **அந்த ஆரவார மகிழ்ச்சியிலும் கழகம் பிறந்த நாளையும் மறக்காமல் நினைவு கூர்ந்தான் கழகத் தோழன்!**

பெரியாரிடமிருந்து வேறுபட்டு -- விலகி வந்து -- எந்த நாளில் கட்சி படைத்தாரோ அதுவே பெரியாரும் பிறந்த நாள்!

கட்சி தொடங்கிய நாளில் அது அவருக்குப் பிறந்த நாள் பரிசாகத் தோன்றாவிட்டாலும், 'இன்றைய அண்ணாவின் அமைச்சரவை பெரியாருக்கு அளிக்கப்பட்ட பரிசு' என்று அண்ணாவே சொன்னார்!

செப்டம்பர் 17-ல் அண்ணா அவர்கள் திருச்சியில் பெரியார் பிறந்த நாள் விழாவில் கலந்து -- கட்டித் தழுவிக் கொண்டது உளம் நெகிழ வைக்கும் காட்சி!

அவர் பிறந்த நாளில்—அவர் பிறந்த புகழ்க்கச்சித் திருநகரம்—அவர் வாழும் நாளிலேயே அவருக்கு முதன் முதலாய்ச் சிலை எடுத்துச் சிறப்பித்துத் தானும் சிறப்புப் பெற்றது! சிலை திறந்து வைத்து, ஆன்றோர் இலக்குமணசாமி அவர்கள் மனம் நெகிழ்ந்து ஆற்றிய உரை எண்ணிப் போற்றற்குரியதாகும்!

'ஒரு நாள் பழகினும் இரு நிலம் பிளக்க வேர் விழ்க்கும் கேண்மை' படைத்த அந்த அண்ணனின் பிறந்த நாளைச் செப்டம்பர் 15 தொடங்கிக் கழகத் தோழர்கள் எப்படி எப்படியோ கொண்டாடினர்; கழகத்துக் கொடியேற்றினர்; அண்ணாவின் படந்திறந்தனர்; கூடி அவர்புகழ் பரவினர்; குழந்தைகட்கு இனிப்புத் தந்தனர்; கரும்பலகை வழங்கினர்; வந்தோர்க்கெல்லாம் விருந்தளித்தனர்; இன்னம் என்னென்னவோ செய்தனர்!

சென்னை மாநகரில் கிளைக் கழகந்தோறும்—துணை மன்றந்தோறும் செய்யப்பட்ட சிறப்புக்கள் எவ்வளவு! பகுதிக்கொரு கூட்டமாய்த் திட்டமிட்டு, நாள்தோறும் முறையாக அண்ணா பிறந்த நாள் கொண்டாடிற்று சென்னை மாவட்டக் கழகம்! இதற்காகக் கிளைக் கழக—துணை மன்றச் செயலாளர்—வட்டக் கழக—மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

தலைநகர் மட்டுந்தானா அப்படி? தமிழகத்தின் திசையெட்டும் அதையொட்டி அண்ணாவின் புகழ் மணந்தான்!

வருவாய்த் துறையினரின் காலடி படாத இடங்கள் ஏதேனும் இருக்குமாயின், அங்கெல்லாம்கூட பிறந்த நாள் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது! கண்பட்ட இடமெல்லாம் நீலவானப் பின்னணியில் இரு வண்ணக் கொடிகள் பெருமிதத்துடன் பறந்துகொண்டிருந்தன!

கருத்தரங்குகள், கவியரங்குகள், மாணவர்-ஆசிரியர் தம் தனி அன்பு காட்டும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன!

இருநூற்றுச் சொச்சம் மைல் தொலைவில் உள்ள முத்துப்பேட்டையிலிருந்து அண்ணா தீச்சுடரைத் தொடர் ஓட்டமாய்க் கொண்டுவந்து சென்னையில் அண்ணியார் கையில் கொடுத்தார்களே!

தொழிலாளர்கள், 'எங்களை வாழ்விக்க வந்த மகானின் விழா இது' என்று சொல்லி மகிழ்ந்தார்கள் என்றால், மாணவர்கள், 'எங்கள் இனங்காக்க வந்த இதயவேந்தரின் விழா' என்றார்கள்!

ஆசிரியர்களும் வணிகரும், மற்றவர் அனைவரும், 'இது எங்கள் தலைவரின் பிறந்த நாள்' என்று சொல்லி எப்படி எப்படியோ விழாக் கொண்டாடினர்!

அவ்வளவு சிறப்புக்களையும் தனித்தனியே சிறக்க வெளியிட 'நம் நாட்'டிற்கு ஆசைதான்—ஆனால், அளவு தடுக்கிறதே! துளித் துளியாய்க் கழியும் காலம் குறுக்கிடுகிறதே! அவை அனைத்தும் 'நம் நாட்'டில் வெளியிட ஒரு மாதம் வேண்டும்; எனவே, ஆசைக்கு அணையிட்டோம்!

பத்திரிகை உலகில், 'நம்நாடு' அகல் விளக்காய் இருந்து—அடக்கமாய்த் தனக்கே உரிய வகையில் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் பங்கு கொண்டது!

வளர்க அண்ணா புகழ்! வாழ்க, அவர் பல்லாண்டு!

—முத்து

பிறநாட்டுத் தமிழறிஞர்களை ஒருசேரக் காணும் வாய்ப்பு!

தமிழ்நாட்டின் முக்கிய இடங்களுக்கு வருகைதர ஏற்பாடு

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பான ஏற்பாடுகள்

சென்னை, செப். 24—

சென்னையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டின் செயற்குழுக் கூட்டம், இன்று மாலை சென்னை அரசினர் கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

தமிழகக் கல்வியமைச்சரும் மாநாட்டின் துணைத் தலைவருமான திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமைவகித்தார்.

மாநாட்டு ஏற்பாடுகள் பற்றிப் பொதுவாக ஆராயப்பட்டது.

திருவாளர்கள் வி. பலராமையா, கி. ஆ. பெ. விசுவநாதம், நாராயணசாமி, எம். எம். தண்டபாணி தேசிகர், கே. எம். பாலசுப்பிரமணியம், டாக்டர் சி. இலக்குவனார், ம. பொ. சிவஞானம், குன்றக்குடி அடிகளார், ஜி. டி. நாயுடு, வி. எஸ். தியாகராச முதலியார், சா. கணேசன், அ. சுப்பையா, தனிநாயகம் அடிகள் ஆகியோர், மாநாடு வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் நடைபெறத் தத்தம் கருத்துக்களையும் ஆய்வுரைகளையும் வழங்கினர்.

மற்றும், அமெரிக்கத் துணைத் தூதுவர் பிராங்ளின், டைரக்டர் கே. சுப்பிரமணியம், திருமதி சௌந்தரா கைலாசம், ஔவை டி. கே. சண்முகம், அப்துஸ் சமது எம்.பி., பி. மதுரைப்பிள்ளை, டி. எஸ். நாராயணசாமி, டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம், கி. வா. ஜகந்நாதன், இ. மு. சுப்பிரமணியபிள்ளை உட்பட குழு உறுப்பினர்கள் பலரும் வந்திருந்தனர்.

பொதுச்செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்., மாநாட்டிற்கென நடந்துள்ள பணிகளை விவரித்துப் பேசுகையில் தெரிவித்ததாவது :—

"உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமிருந்து ஏறக்குறைய 500 பேர் வந்து மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இதுவரை 29 நாடுகளிலிருந்து மாநாட்டுக்கு வர இசைவு தெரிவித்துள்ளனர்; இன்னும் பல நாடுகளிலிருந்தும் விரைவில் பதில் கிடைக்கும். 'மாநாட்டுக்கு வந்துபோகும் செலவை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று அறிவித்திருக்கிறோம்.

கோலாலம்பூரில் நடந்த மாநாட்டுக்குச் சென்றவர்களுக்கு மாநாட்டின் சார்பிலேயே செலவிடப்பட்டது; ஆனால் நாட்டுப் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக, நாம் அவர்களுக்கான அந்நியச் செலாவணித் தேவையை ஏற்க முடியவில்லை; எனவே, சில வசதிபடைத்த நாடுகளைச் சேர்ந்தவர்கள்கூட, தங்கள் சொந்தச் செலவில் வர இயலாமையைத் தெரிவித்திருக்கின்றனர். நாமே செலவுசெய்து அழைப்பதானால் மேலும் பல நாடுகளிலிருந்து அதிகமானவர்கள் வரக்கூடும்; அதற்கு நம்மிடம் வசதி இல்லை.

மாநாட்டுச் செலவுக்கெனத் தொழிலதிபர்கள், பஸ் உரிமையாளர்கள், கோயில்கள், அறநிறுவனங்கள், மற்றும் கல்லூரி—பள்ளி மாணவர்கள், திரைப்பட அரங்கு நடத்துவோர் ஆகியவர்களிடமிருந்தெல்லாம் பணம் திரட்டித் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளோம்; அரசினரும் ஓரளவு செலவினை ஏற்பார்கள்.

கருத்தரங்குக்கு—ஆராய்ச்சிக் கட்டுரைகளை அக்டோபர் 31-ஆம் நாளுக்குள் அனுப்பிவைக்க வேண்டும் என்றும், கட்டுரையின் சுருக்கத்தை அக்டோபர் 15-ஆம் நாளுக்குள் அனுப்பிவிட வேண்டும என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநாடு சனவரி 3-ஆம் நாள்முதல் 10-ஆம் நாள் முடிய நடைபெறும்; அதன் பின், 16-ஆம் நாள் வரை தமிழ்நாட்டின் புகழ் பெற்ற இடங்களுக்குத் தமிழறிஞர்கள் அழைத்துச் செல்லப் படுவர்.

மாநாடு நடைபெறும் நாட்களிலேயே இடையில் இருக்கும் விடுமுறை நாளில் — மகாபலிபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்த்து வருவர்.

மாநாடு முடிந்த பிறகு—சிதம்பரம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, கோவை முதலிய இடங்களுக்குத் தனி இரயில் வண்டியில் புலவர் பெருமக்களை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டிவர ஏற்பாடு செய்யப்படுகிறது.

மாநாட்டின், இடையே ஒரு நாளைக்கு இரண்டு வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

தமிழ்நாட்டுக்கே உரிய இசைக் கருவிகளைக்கொண்டு, பல தமிழ்ச் சொற்களை கருவிகளாலேயே எழுப்பிக்காட்டும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் முற்பகலில் ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் ஒவ்வொரு துறையைப் பற்றியும் தனித்தனியே தனித்தனி இடங்களில் நடைபெறும்; பிற்பகலில் எல்லாத் துறையினரும் ஓரிடத்தில் கூடித் தங்கள் ஆய்வினைப் பற்றி பரிமாறிக் கொள்வர்.

மாநாட்டின் பொது நிகழ்ச்சிகளைக் காண பொதுமக்களுக்கும் வாய்ப்பளிக்கப்படும்.

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் பொதுமக்களும் அமர்ந்து பார்க்கத்தக்க வகையில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும்.

மாநாடு நடக்கும் நாட்களில் சென்னை நகரின் ஒவ்வொரு பகுதியிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தி, அவற்றில் வெளிநாட்டுத் தமிழறிஞர்களைப் பேசச் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது."

மாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழிலேயே நடைபெற வேண்டும்" என்று, திருவாளர்கள் கி. ஆ. பெ. விசுவநாதம், ம. பொ. சிவஞானம், இலக்குவனார் ஆகியோர் கருத்தறிவித்தார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் கருணாநிதி உடல் நிலை :

இப்போதைய மருந்தே ஓய்வுதான்---இனிமேல் அபாயம் ஏதுமில்லை!

சென்னை, செப். 27—

செவ்வாயன்று இரவு அமைச்சர் கருணாநிதி சிறிது நிம்மதியுடன் தூங்கினார். இரவிலும் டாக்டர்கள் வெகு கவனமுடன் அமைச்சரைக் கவனித்து வருகின்றனர்.

'அபாயம் ஏதுமில்லை'---டாக்டர்கள் கருத்து

அமைச்சர் கருணாநிதிக்குத் தலையில் அடிபட்டது பற்றி இது நாள்வரை சோதனையும் சிகிச்சையும் செய்த டாக்டர்கள் கீழ்க் கண்டவாறு தமது கருத்தைத் தெரிவித்துள்ளனர் :—

"இதேமாதிரி தலையில் அடிபடும் சில சமயங்களில் ஏற்படும் எதிர்பாராத—மோசமான விளைவுகள் ஏதும் ஏற்படவில்லை; இனிமேல் அபாயம் ஏதுமில்லை."

உடல் நிலையில் முன்னேற்றம்

மருத்துவமனையிலுள்ள கலைஞர் கருணாநிதி அவர்களின் உடல் நிலையில் வெகுவாக முன்னேற்றம் இருந்தது! முகத்திலிருந்த வீக்கம் குறைந்து வருகிறது; காயங்களும் ஆறி வருகின்றன. தலையில் காயம்பட்டிருப்பதால், அடிக்கடி டாக்டர்கள் கண்காணித்து வருகின்றனர். உடல் வலி தீரத்தான் மருந்து கொடுக்கப்படுகிறது.

"பலத்த அடி காரணமாக கண்களில் ஏதாவது பாதிக்கப்படுமோ" என்ற அச்சம் இருந்தது தவிர்க்கப்பட்டுள்ளது.

உணவு அருந்துகிறார்

அமைச்சருக்கு திட உணவு தரப்பட்டது; காலை உணவாக ரொட்டியின் மிருதுவான பாகத்தை எடுத்து பாலில் தோய்த்துத் தரப்பட்டது; மதியம் ரசம் கலந்து நன்றாகக் கரைக்கப்பட்ட உணவும் மோர் கலந்து நன்றாகக் கரைக்கப்பட்ட உணவும் தரப்பட்டது.

அண்ணா சந்தித்தார்-- உடல்நிலை பற்றி விசாரித்தார்

நேற்று காலை 11-40 மணியளவில் மருத்துவமனைக்கு வந்த அறிஞர் அண்ணா அவர்கள், நேராக அமைச்சர் கருணாநிதி இருக்கும் படுக்கைக்குச் சென்றார். சிறிது நேரம் நின்றபடியே பார்த்தார்; பிறகு தம்முடன் வந்தவர் அனைவரையும் வெளியே போகச் சொன்னார்.

முரசொலி மாறனை அருகில் அழைத்து, 'காய்ச்சல் ஏதாவது இருந்ததா?' என்று கேட்டார்; 'இப்போது இல்லை' என்றார் மாறன்.

பிறகு அண்ணா அவர்கள், கருணாநிதியின் அருகில் சென்று, 'எப்படியப்பா இருக்கிறது?' என்று வாஞ்சை மிகுந்த குரலில் கேட்டார்; 'இப்போது சுமாராக இருக்கிறது' என்று மிகவும் மெலிந்த குரலில்—சைகை மூலமாகக் காட்டினார் கருணாநிதி.

'எங்கு வலி அதிகம்?' என்று கருணாநிதியின் காதுக்கு அருகில் குனிந்துகேட்டார் அண்ணா.

இடதுபுறத் தொண்டைப் பகுதியைக் காட்டிய கருணாநிதி— இடது கையை லேசாக உயர்த்தி, 'இங்குள்ள வலி தாள முடியவில்லை' என்றார்.

பிறகு அண்ணா அவர்கள் அமைச்சரின் வயிற்றைத் தொட்டுப் பார்த்தார்; சுரம் அடிக்கிறதா என்று குரல்வளைக்கருகில் தொட்டுப் பார்த்தார்.

பிறகு டாக்டரையும், நர்சையும் அழைத்து, அமைச்சரின் உடல் நிலை பற்றி விசாரித்தார்.

தலைமையமைச்சர் உடல்நலன் பற்றி அறிந்தார்

கார் விபத்தில் சிக்கிய தமிழகப் பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதியின் உடல் நலன் பற்றி இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, இங்கு வந்துள்ள மாநில உணவமைச்சர் கே. ஏ. மதியழகனிடம் விசாரித்தறிந்தார்.

வங்கத் தமிழர் தந்தி

வங்கத் தமிழர் சங்கத்தினர் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதிக்கு அனுப்பியுள்ள தந்தியில், விபத்து செய்தி கேட்டு தாங்கள் மிகுந்த வருத்தமுறுவதாகவும், விரைந்து நலமடையத் தாங்கள் விழைவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அமைப்புச் செயலாளர்

என்.வி. நடராசன்

சுற்றுப்பயணம் ரத்து--- கருணாநிதியை பார்த்தார்

சென்னை, செப். 27—

நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், அமைச்சர் கருணாநிதி கார் விபத்தில் சிக்கியதை அறிந்து தம் சுற்றுப்பயணத்தை ரத்து செய்துவிட்டு, சென்னை திரும்பினார்.

நேற்று அவர், தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அமைச்சர் கருணாநிதி, மதுரை எஸ். முத்து, டிரைவர் பாண்டி ஆகியோரைப் பார்த்து உடல்நிலை விசாரித்து ஆறுதல் கூறினார்.

முத்து குடும்பத்தினர்...

அமைச்சர் கருணாநிதி அவர்களுடன் கார் விபத்துக்கு ஆளான மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்களது துணைவியார் திருமதி ரஞ்சிதமும், அவரது குழந்தைகளும் கார் மூலம் சென்னை வந்து சேர்ந்தனர்.

உடன் மருத்துவமனை சென்று, அமைச்சர் — முத்து—டிரைவர் அ. பாண்டி ஆகியோரைக் கண்டு உடல்நலம் பற்றி விசாரித்துத் தெரிந்துகொண்டனர்.

பாண்டி குடும்பத்தினர்...

டிரைவர் அ. பாண்டியன் குடும்பத்தினரும் வந்துள்ளனர். அவரது தம்பி சின்னக்காளை, மருத்துவமனையிலேயே தங்கியிருந்து உதவி வருகிறார்.

வேண்டுகோள்

"அமைச்சர் கருணாநிதிக்கு இப்போதைய மருந்தே ஓய்வுதான்" என்று டாக்டர்கள் கூறியிருக்கிற காரணத்தால் கழகத் தோழர்களும், நண்பர்களும் மருத்துவமனை செல்லாதிருக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

அண்ணல் காந்தியார் அறவழி போற்றுவோம்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தியடிகள்—இந்த நாடு தன்னிறைவு பெற வேண்டும் என்பதையும், உழவுத் துறையிலும், தொழில் துறையிலும் உற்பத்தி பெருக வேண்டும் என்பதையும், அவற்றின் மூலம் இந்த நாடு வயிறார உண்ண உணவும், மானமார உடுக்க உடையும், இருக்க இடமும், அறிவார கல்வியும் பெறவேண்டும் என்பதைத் தம் வாழ்நாள் முழுவதும் கூறிக்கொண்டே வந்தார்.

அதற்கேற்ப, இவ்வாண்டு பிறந்த நாளை ஒட்டி வருகின்ற வாரத்தை 'உற்பத்திப் பெருக்க வார'மாகக் கொண்டாடுவது, எல்லா முறையிலும் பொருத்தமுடையதாக விளங்கும் என்பதோடு, அண்ணல் அவர்களுக்கு உரிய முறையில் அஞ்சலி செய்வதாகவும் அமையும்!

காந்தியடிகளின் திட்டங்களை நிறைவேற்றுவதில் எப்போதும் முன்னணியில் இருந்துவருகின்ற தமிழகம், இந்த வகையிலும் முன்னணியில் நிற்கும் என்பதில் ஐயமில்லை!

'மழை இல்லையே' என்பதற்காக, மக்கள் மனம் சோர்ந்துவிடக் கூடாது' என்பது காந்தியடிகளின் கருத்து!

'நிலத்துக்கு அடியில் ஏராளமான அளவில் உள்ள நீர் வசதியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்' என்று அவர் அடிக்கடி வற்புறுத்துவார்!

அவர் சொன்ன வழியில் நமது பணிகள் அமைவது மகிழ்ச்சிக்குரியதாகும்!

'உற்பத்திப் பெருக்கத்திற்கு உழுபடை கருவிகளைவிட மக்களின் ஊன்றிய மனம்தான் மிக்க வலிமையுடையது' என்றும், 'தேவைப்படுவது' என்றும் காந்தியடிகள் கூறிவந்தார்கள்.

உற்பத்திப் பெருக்கத்திற்கான பொறுக்கு விதைகள்—உர வசதிகள்—பாசன வசதிகள்—பயிர்ப் பாதுகாப்பு முறைகள் போன்ற உதவிகளைத் தமிழக அரசு எவ்வளவுதான் செய்ய முன்வந்தாலும், காந்தியடிகள் கூறியதைப் போன்று, மக்களின் முழுவன்போடுகூடிய ஊன்றிய மனம் தான் மிகவும் தேவைப்படுகிறது. அத்தகைய மனத்தன்மையைப் பெரும் அளவில் பெறுவதற்காகவே, இவ்வாண்டு காந்தியடிகள் பிறந்த நாள் வாரத்தை, 'உற்பத்திப் பெருக்க வார'மாகக் கொண்டாட வேண்டுமென்று பெரிதும் விழைகிறோம்.

உற்பத்தியைப் பெருக்கப் பெரும் திட்டங்கள் தான் வேண்டுமென்பதில்லை; சிறு சிறு முயற்சிகள் மூலம் உருவான பலனைப் பெற முடியும்.

சிற்றூர்களிலுள்ள சீரணிப் படையினரும், பொது மக்களும், சிறு சிறு குளங்கள்—வாய்க்கால்கள் ஆகியவற்றை இந்த வாரத்தில் சீர்படுத்தி அமைக்க முன்வரலாம்.

ஊர்தோறும் காணப்படும் வெற்றிடங்களை விளைச்சல் தரும் இடங்களாக மாற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

பழ மரங்கள், காய்கறிகள், பயிர்கள் போன்றவற்றை இடத்திற்கேற்றபடி விளைவிக்க முயலலாம்.

நகர்ப்புற மக்கள் தங்கள் மனைகளுக்கு அருகிலும் அல்லது சுற்றிலும் இடவசதி இருப்பின், காய்கறி பயிரிடுதல் போன்ற பயனுள்ள வேலைகளில் ஈடுபடுவது நலம் பயக்கும்.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்பதற்கிணங்க, உள்ளன்போடு உழைத்தால் உறுதியான பலன் கிட்டும்.

பொருள் உற்பத்தி பெருகத் தொழிலாளர்களும்— முதலாளிகளும் ஒத்துழைத்து, அவர்களிடையே நல்ல உறவும் நேச மனப்பான்மையும் நிலவ வேண்டும். 'முதல்'தனை ஆள்பவர்கள் முதலாளிகள்—'தொழில்'தனை ஆள்பவர்கள் தொழிலாளிகள்; இரண்டும் சேர்ந்தால்தான், பொருள் உற்பத்திப் பெருக வழி ஏற்படும்.

முதலாளிகள், தொழிலாளர்களுக்கு உரிய உரிமைகளைக் குறைபடாது வழங்க முன்வர வேண்டும்; அதேபோன்று தொழிலாளிகள், தாம் பெறும் உரிமைக்கேற்ப கடமை ஆற்ற முன்வர வேண்டும்.

உரிமையும் கடமையும் சீராக நிலைநாட்டப்பட்டால்தான் பொருள் உற்பத்தி பெருக வழி ஏற்படும்.

இந்த நல்லுறவும் நல்ல மனப்பான்மையும் உறுதியுடன் பெற, 'காந்தியடிகள் பிறந்த நாள் வாரம்' பெரிதும் பயன்பட வேண்டும்.

இயற்கைப் பொருளெல்லாம் செயற்கைப் பொருளாக மாற்றப்பட்டால்தான், நாட்டின் தேவைகளை நிறைவேற்றும் வசதிகளும், வாய்ப்புக்களும் ஏற்பட முடியும்.

காந்தியடிகள் பிறந்த நாள் வாரத்தில் பெண்களுக்கும் தனிப் பொறுப்பு உண்டு. இல்லங்களைத் துப்புரவோடு வைத்துக்கொள்ளுதல்—சிக்கனமான வாழ்க்கையைக் கடைபிடித்தல்—குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ளுதல்—அறியாதார்க்கு அதை விளக்குதல் — சிறு தொழில்களை மேற்கொள்ளுதல்—குழந்தை நலம் பேணுதல்—போன்ற பல்வேறு பணிகளில் அவர்கள் ஈடுபடலாம்.

மாணவர்கள் இந்த வாரத்தில், உடலுழைப்பை நினைவுறுத்துகின்ற வகையில் தத்தம் பள்ளிகள்—கல்லூரிகள் ஆகியவற்றிலுள்ள வெற்று இடங்களில் தோட்டங்களை வைத்தல், பள்ளிகளைச் சுற்றியுள்ள சாலை ஓரங்களில் மரம் வளர்ப்பதற்கான செடிகளை நடுதல், சீருடை முறையை ஏற்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடலாம்.

உற்பத்திப் பெருக்கத்திற்கேற்ற சூழ்நிலையை உருவாக்குவதில் செய்தித் தாளினருக்கும், கிழமை இதழினருக்கும் முக்கியப் பொறுப்பு உண்டு; உற்பத்தியைப் பெருக்க மலர்களையும், சிறப்புக் கட்டுரைகளையும் அவர்கள் வெளியிடலாம்; புதிய கண்டுபிடிப்புக்களையும், விவரங்களையும், அவற்றை எந்த முறையில் உழவர் பெருங்குடி மக்கள் கையாளலாம் என்பதையும், சிறு சிறு தொழில்களை எங்கெங்கு—எப்படி எப்படி ஆரம்பிக்கலாம் என்பதையும் விவரமாகவும், விளக்கமாகவும் தெரிவித்து, வறுமை அழிக்கும் பெரும் பணியில் சமுதாயத்தை ஈடுபடுத்தச் செய்தித் தாள்கள் பெரும் ஊக்கமும் ஆக்கமும் தரலாம்.

நிலமடந்தை எல்லாச் செல்வங்களையும் தன்னிடத்தே கொண்டிருக்கிறாள்; அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாதவர்கள், சோம்பேறித்தனமாய், 'ஏதும் நமக்கில்லை' என்ற வருந்தியிருப்பார்கள்; அவர்களைப் பார்த்து நிலமடந்தை எள்ளி நகையாடுகிறாள் என்னும் கருத்துப்பட—வள்ளுவப் பெருந்தகை,

"இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்"

என்று கூறியிருப்பது இங்கு கூர்ந்து நோக்கத் தக்கதாகும்.

நாட்டு மக்களுக்கு நலந்தரும் உயரிய பண்புகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்தவர் காந்தியடிகள் ஆவார்கள்! அவர் எல்லோருக்கும் உரியவர்—எல்லா நாட்டினருக்கும் உரியவர்! அவர் கூறிய அறிவுரைகளும், அவர் பெயரும் புகழும் என்றென்றும் நின்று நிலவி, நமக்குச் சிறப்பான—செம்மையான—சீரான நல்வாழ்வு அளிப்பனவாக!

வாழ்க காந்தியடிகள் பெயரும் புகழும்!

—[காந்தியார் பிறந்த நாள் விழாவையொட்டி வானொலி நிலையத்திலிருந்து ஆற்றிய உரை]

பிறநாட்டுத் தமிழறிஞர்

[3-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

திரு. கே.எம். பாலசுப்பிரமணியம், 'ஆங்கிலத்தில் நடப்பது தவறில்லை' என்றார்.

தலைமை வகித்த அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கருத்தறிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"மாநாடு தமிழில்தான் நடைபெற வேண்டும் என்றோ, ஆங்கிலத்தில்தான் நடைபெற வேண்டும் என்றோ கூறுவது சரியாகாது. கூடியவரை தமிழிலேயே நடத்த முயற்சி செய்வோம்; தமிழிலே தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்ல முடியாதவர்கள் ஆங்கிலத்திலே பேசினால், அதையும் அனுமதிக்கும் வகையில் ஏற்பாடு செய்வோம்.

இதற்குக் காரணம், வெளிநாட்டுத் தமிழறிஞர்களில் பலர் தமிழில் எழுத — படிக்க — ஆராய்ச்சிகளைச் செய்யவல்லவர்களாக இருந்தாலும், நம்மைப்போலத் தமிழில் சரளமாகப் பேசவோ, நாம் பேசும் வேகத்தைப் பின்பற்றிப் புரிந்துகொள்ளவோ இயலாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் நிலைமையை அறிந்து அவர்களும் பங்கு கொள்ள நாம் வாய்ப்பளிக்க வேண்டுமானால், ஆங்கிலத்திலும் பேச அனுமதிக்க வேண்டும்; அப்போதுதான், 'நம் தமிழைப் பற்றிப் பிற நாட்டார் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்பதையும், அவர்களின் ஆராய்ச்சி முடிவுகளையும், நாம் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும்."

இந்த மாநாட்டில் தமிழ் இசை ஆராய்ச்சியும், தமிழ் சித்த மருத்துவ ஆராய்ச்சியும் முக்கிய இடம் பெறும் என்பதை, இசைக்குழுத் தலைவர் எம்.எம். தண்டபாணி தேசிகரும், சித்த மருத்துவக் குழுத் தலைவர் திரு. வி. பலராமையாவும் எடுத்துரைத்தார்கள்.

அமைச்சர் உரையுடன் திரு. வி. கார்த்திகேயன் நன்றிகூறக் கூட்டம் முடிந்தது.

முகவரி

என். வி. நடராசன் எம்.எல்.சி.
9, பாண்ட் லேன்ஸ்,
அரசினர் தோட்டம்,
மவுண்ட்ரோடு, சென்னை-2.

தொலைபேசி எண் :
86672

நடக்க இருப்பவை

28--9--67

அம்மையப்பன்

தி.மு.க.—எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு; பேசுவோர் : நன்னிலம் அ. நடராசன், கோ. சி. மணி, மற்றும் பலர்.

கீழ்மாந்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மாரியம்மன் கோயில் அருகில்; தலைவர் : காத்தமுத்து; பேசுவோர் : பொன். தருமன், பி. ஏ. லிங்கன், மோ. ம. வேலன், ஒய். எம். அனிபா. கே. ஏ. அமீர் ஒலி, எஸ். பஷீர்.

திரு. வி. க. நினைவு நாள்

சென்னை — எஸ்பிளனேடு ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்ற மண்டபத்தில் 28—9—67 மாலை 6-15 மணிக்கு, நல். முருகேச (முதலியார்) தலைமையில், தமிழ்த் தென்றல்; திரு. வி. க. நினைவு நாள் நடைபெறும்; பேராசிரியர் ஆலால சுந்தரனார், மா. சு. சம்பந்தம் ஆகியோர் உரையாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.